# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,936—1970 දෙසැම්බර් 11 වැනි සිකුරාදා—1970.12.11

14,936 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 11 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித் தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | 699 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | 699 | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 706 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. .. | 700 | "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் .. .. | — |


## மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 404

எண். டி. 88/ஆர்.ஈ.சிரி.

### இலங்கை அரச ஆகாயப்படை—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறல்

கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர் 1971 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் திகதியிலிருந்து இலங்கை அரச ஆகாயப்படையிலிருந்து இளைப்பாறுகிறார்:

ஏயார் வைஸ் மார்ஷல் ஏகநாயக்க ரோகன் அமரசேகர, டி.எவ்.சி. (01002) பொதுவேலைகள்/விமான ஓட்டி.

அதி உத்தமரின் ஆணைப்படி,

ஏ. ஆர். ரத்னவேல்,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு திசெம்பர் மீ 3 ந் டீ.

12–417

## நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 405

| உத்தியோகத்தர் பெயர் | புதிய நியமனம் | புதியநியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. எம். பி. விஜசிங்க .. | பதில் மாவட்ட நீதிபதிமுதலியன, கேகாலை .. | 1970 நவம்பர் 29 லிருந்து .. | திரு. கே. சி. ஈ. டீ அல்விஸ் இல்லாத காலங்கள் |
| திரு. எம். எம். அப்துள்காதர் .. | இணைமாவட்ட நீதிபதிமுதலியன, பாணந்துறை, அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | ஷை .. | பாணந்துறை மாவட்ட நீதிமன்ற 9976, 11950, 11525, 11514, 11472 இலக்க வழக்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1970 ம் ஆண்டு யூன் மீ 2 ந் டீ.

எல். டபிள்யூ. பி. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

| உத்தியோகத்தர் பெயர் | புதிய நியமனம் | புதிய நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. ஆர். விக்ரமசிங்க .. | இணை நீதவான் முதலியன, காலி .. | 1970 டிசம்பர் 2, 6, 7 .. | திரு. எல். எச். ஜீ. வீரசேகர இல்லாத காலங்கள் |
| திரு. ஏ. சிவகுருநாதன் .. | இணைவிண்ணப்பநீதிமன்ற ஆணையாளர் முதலியன, கொழும்பு | 1970 நவம்பர் 26 .. | திரு. என். தெவேந்திரா இல்லாத காலம் |
| திரு. ரி. ஆசீர்வாதம் .. | இணை மாவட்ட நீதிபதிமுதலியன, இரத்தினபுரி | 1970 டிசம்பர் 2 விருந்து 4 வரை | திரு. சி. எம். தர்மலிங்கம், இல்லாத காலங்கள் |
| திரு. டபிள்யு. ஈ. பெரேரா .. | இணை மாவட்ட நீதிபதிமுதலியன, கம்பக.. | 1970 டிசம்பர் 2 .. | திரு. எம். ஜாமீல் இல்லாத காலம் |
| திரு. எம். எல். என். விக்ரமசிங்க.. | இணை நீதவான் முதலியன, காலி .. | 1970 டிசம்பர் 6 .. | திரு. ஜே. சேனுதிருஜா இல்லாத காலம் |
| திரு. எல். டபிள்யு. பெர்னன்டோ.. | கண்டி இணைமாவட்டநீதிபதி, கம்பளைமுதலிய இடங்களில் | 1970 டிசம்பர் 3 விருந்து, 6, 10, 11 | திரு. எல். ஏ. குணவர்த்தன இல்லாத காலங்கள் |
| திரு. ஜே. எஸ். ருஜபக்ச .. | இணை நீதவான் முதலியன, சிலாபம்–புத்தளம் | 1970 நவம்பர் 27 .. | திரு. எஸ். பி. குணவர்த்தன இல்லாத காலம் |
| திரு. எம். ஒ. எம். தாஹிர் .. | இணை நீதவான் முதலியன, குருணகல் .. | 1970 நவம்பர் 29, 30 .. | திரு. டபிள்யு. என். எஸ் விஜரட்ண இல்லாத காலங்கள் |
| திரு. ஜே. எஸ். ருஜபக்ச .. | இணை மாவட்ட நீதிபதி முதலியன, சிலாபம்–புத்தளம் | 1970 நவம்பர் 27 விருந்து டிசம்பர் 3 வரை | திரு. எம். ஏ. எம். உசேன் இல்லாதகாலங்கள் |
| திரு. கே. ஈ. கதிகாமலிங்கம் .. | இணை மாவட்ட நீதிபதிமுதலியன, யாழ்ப்பாணம் | 1970 டிசம்பர் 2 .. | திரு. ஆர். பரமகுரு இல்லாத காலம் |
| திரு. பி. வி. சேனுதிருஜா .. | இணை மாவட்ட நீதிபதிமுதலியன, மன்னார்–வவுனியா | 1970 டிசம்பர் 1 விருந்து 5 வரை | திரு. எம். பி. ஜீ. திசனுயக்க இல்லாத காலங்கள் |
| திரு. எம். விஜசூரிய .. | கொழும்பு இணை நீதவான் முதலியன, ஹோமாகமவில் | 1970 நவம்பர் 26 .. | திரு. சி. அமெரசிங்க இல்லாத காலம் |
| திரு. ஆர். வி. வில்வருஜா .. | இணை நீதவான் முதலியன, வவுனியா .. | 1970 நவம்பர் 26 விருந்து 30 வரை | திரு. கே. சின்னத்தம்பி இல்லாத காலங்கள் |
| திரு. எச். எம். குணசேகர .. | மாகம்பத்து முதலியனவற்றின் ஊர்நீதிமன்றப்பதில் தலைவர் | 1970 நவம்பர் 9, 10 .. | திருமதி பி. எஸ். இராமச்சந்திர இல்லாத காலங்கள் |
| திரு. எம். எச். காரியப்பர் .. | பாணமைப்பத்து முதலியவற்றின் ஊர் நீதிமன்றப்பதில் தலைவர் | 1970 நவம்பர் 7 விருந்து 12 வரை | திரு. எஸ். ருஜனுதன் இல்லாத காலங்கள் |
| திரு. கே. ஏ. அரசக்கோன் .. | ஏருவூர்கோறளை முதலியவற்றின் ஊர்நீதிமன்றப்பதில் தலைவர் | 1970 நவம்பர் 30, டிசம்பர் 2 விருந்து 4 வரை | திரு. எச். அமீன் இல்லாத காலங்கள் |
| திரு. ரி. யு. கரவிற்ற .. | நுவரகம்பலாத்த வடக்கு முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 நவம்பர் 9, 10 .. | திரு. டபிள்யு. ஏ. பி. ஓ. பெர்னன்டோ இல்லாத காலங்கள் |
| திரு. ஆர். வி. வில்வருஜா .. | வவுனியா தெற்கு முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில்தலைவர் | 1970 நவம்பர் 26, 27, 29, 30 | திரு. கே. சின்னத்தம்பி இல்லாத காலங்கள் |
| திரு. ஐ. எம், வீரரட்ண .. | கடவத்தக்கோறளை முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 நவம்பர் 26 .. | திரு. டபிள்யு. குணவர்த்தன இல்லாத காலம் |
| திரு. ஆர். வி. வில்வருஜா .. | வவுனியாவடக்கு முதலியவற்றின் ஊர்நீதிமன்றப்பதில் தலைவர் | 1970 நவம்பர் 15 .. | திரு. ஏ. எம். ஐ. சாஹீட் இல்லாத காலம் |
| திரு. டி. ஈ. எஸ். ரணசிங்க .. | பிற்றிகல் கோறளை வடக்கு முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 டிசம்பர் 2 விருந்து 4, 6 விருந்து 11, 14 விருந்து 19, 21 | அல்லது மறு அறிவித்தல் வரை |
| திரு. கே. எம். அதுக்கோறளை .. | பல்துன்கோறளை மேற்கு முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 டிசம்பர் 2 .. | திரு. எச். எஸ். திலகரட்ண இல்லாத காலம் |
| திரு. ஜி. சூரியஆராச்சி .. | குளியப்பட்டி காரியதிகாரப் பிரிவு முதலியவற்றின் ஊர்நீதிமன்றப்பதில் தலைவர் | 1970 நவம்பர் 19, 20, 22 விருந்து 25, 27 | திரு. எஸ். கடவத்த ஆராச்சி இல்லாத காலங்கள் |
| திரு. கே. கணபதிப்பிள்ளை .. | தென்மராட்சி முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 ஒக்டோபர் 30, 31, நவெம்பர்/2, | திரு. கே. சண்முகனுதன் இல்லாத காலங்கள் |
| திரு. அல் ஹஜ், எம். சி. எம். ஹசன் | காதி, யற்றுனுவர அரசிறைப் பிரிவு, கண்டி மாவட்டம் | 1970 டிசம்பர் 1 விருந்து .. | மூன்று வருட காலத்திற்கு அல்லது மறு அறிவித்தல் வரை |

நீதிச்சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. 573,
கொழும்பு 12, 1970 ந் ஆண்டு டிசம்பர் மீ 3 ந உ.

எல். சமரதுங்க,
பதில் செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

12–416

# அரசாங்க அறிவித்தல்கள்

எல்.டி.பி. 80/51.

## பொது அரங்காட்டச் சட்டம்

பொது அரகாட்டுச் சட்டத்தின் (அத்தியாயம் 176) 6 ஆம் பிரிவின் கீழ் கலாச்சார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

எஸ். எஸ். குலதிலக,
கலாச்சார அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு நவம்பர் மீ 22 ந உ.

### கட்டளை

1. 1953 ம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆந் திகதிய 10,485 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1952 ஆம் ஆண்டு பொது அரங்காட்டுச் சட்டம் பின்னர் திருத்தி அமைக்கப்பட்டதற்கு அமைய, அதனகத்துள்ள நான்காம் அட்டவணைக்குப் பதிலாக பின்வரும் புதிய அட்டவணையை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தி அமைக்கப்படுகின்றது.

நாலாவது அட்டவணை

1. நிரந்தரச் செயலாளர், காலச்சார அலுவல்கள் அமைச்சு(தலைவர்)
2. பொலிஸ் மா அதிபதி.
3. கொழும்பு மாநகர சபை ஆணையாளர்

4. கல்வி மா அதிபதி
5. நன்னடத்தைப் பாதுகாவல் குழந்தைபேணற் சேவைத்தினக்கள ஆணையாளர்
6. கலாச்சார அலுவல்கள் அதிபர்
7. மா அதிபதி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
8. தகவல் அதிபர்
9. திருமதி சி. வி. பர்ணந்து
10. திருமதி. எம். முத்துத்தம்பி
11. திருமதி எஸ். ஏ. விக்கிரமசிங்க
12. திருமதி ஏ. கார்த்திகேசன்
13. திருமதி. எம். ஏ. திசாநாயக்க
14. திருமதி ஏ. நிமலசூரிய
15. திருமதி சீ. ஐ. ரத்வத்தை
16. திருமதி கங்கா முனசிங்க
17. திருமதி பி. எம். இரட்னவேல்
18. திருமதி ரி. பி. சுபசிங்க
19. திருமதி பாலம் இலக்மணன்
20. திரு. சோமசிறி கலகெதற
21. திரு. பியல் விக்கிரமசிங்க
22. திரு. டபிள்யு. கே. சமரதாச
23. திரு. ஆரியவன்ச பத்திராஜ
24. திரு. ஈ. விக்ரர் தாபரே
25. திரு. ஆர். ஏ. சிரில் பெரேரா
26. திரு. எஸ். எஸ். விஜயரத்ன
27. திரு. டி. ரி. லியனமானகே
28. திரு. நலின் அபயநாயக்க
29. திரு. டபிள்யு. பி. குணதிலக்க
30. திரு. டபிள்யு. பி. தொறகும்புற
31. திரு. ஜி. எஸ். அபயவர்தன
32. திரு. மேவின் சி. பெரேரா
33. திரு. எஸ். ஏ. மௌலானா
34. திரு. எம் பந்துஜீவ பெரேரா
35. திரு. ஜக்சன் சேனாரத்ன
36. திரு. நிமல் ஹொறன
37. திரு. டி. ஜி. ஓ. வஜிறபாணி
38. திரு. எச். கே. மகிந்ததாச
39. திரு. சரத் குறே
40. திரு. ரி. துரைசிங்கம்
41. திரு. ஜி. ஏ. ஆனந்த ஈஸ்வரம்
42. கலாநிதி கே. சிவதம்பி
43. திரு. சிறி சிவப்பிரகாசம்
44. திரு. குணசேன வித்தான.
45. திரு. ஏ. எச். ராஜகொற்வாலா.

2. இக்கட்டளையின் 1 ஆம் பந்தியால் திருத்தி அமைக்கப்படுதற்கமைய 1952 ஆம் ஆண்டின் பொது அரங்காட்டுச் சட்டத்தின் நான்காம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களின் உறுப்புரிமை 1973 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி முடிவடையும்.

12–42

## அறிவித்தல்

கீழே தரப்பட்டுள்ள 1971 ஆம் ஆண்டுக்கான அரசாங்க வங்கி விடுமுறை நாட்கள் கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதை இத்தால் பொது மக்கள் அறியத் தரப்படுகின்றன.

லயனல் பர்ணந்து,
நிரந்தரச் செயலாளருக்காக,
பொது நிருவாக, உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

ரொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7.
3.12.1970.

### 1971—அரசாங்க வங்கி விடுமுறைநாட்கள்

| | | |
|---|---|---|
| சனவரி | 1 | .. தேசியத் தலைவர்கள் தினம்*† |
| சனவரி | 14 | .. தைப்பொங்கல் திருநாள்*† |
| பெப்புருவரி | 4 | .. சுதந்திர ஞாபக தினம்*† |
| பெப்புருவரி | 7 | .. ஈதுல் அழ்கா (ஹஜ்ஜுப் பெருநாள்)*† |
| பெப்புருவரி | 23 | .. மகாசிவராத்திரி தினம்*† |
| ஏப்ரல் | 9 | .. பெரிய வெள்ளிக்கிழமை*† |
| ஏப்பிரல் | 11 | .. ஈஸ்ரர் ஞாயிறு*† |
| ஏப்பிரல் | 13 | .. சிங்கள, தமிழ்ப் புதுவருடத் திருநாளுக்கு முந்திய நாள்*† |
| ஏப்பிரல் | 14 | .. சிங்கள, தமிழ் புதுவருடத் திருநாள்*† |
| ஏப்பிரல் | 25 | .. விசேட வங்கி விடுமுறை நாள்† |
| மே | 1 | .. மே தினம்*† |
| மே | 8 | .. மீலாதுன் நபி (நபிகள் நாயகம் அவர்கள் பிறந்த நாள்)*† |
| மே | 10 | .. சிங்கள வைகாசிமாதப் பூரணை நாளுக்கு அடுத்து வரும் நாள்*† |
| மே | 16 | .. விசேட வங்கி விடுமுறை நாட்கள்† |
| யூன் | 30 | |
| யூலை | 1 | |
| செப்தெம்பர் | 19 | |
| செப்தெம்பர் | 26 | .. பண்டாரநாயக்க ஞாபகார்த்த தினம்*† |
| செப்தெம்பர் | 27 | .. விசேட வங்கி விடுமுறை நாள்† |
| அக்டோபர் | 10 | .. விசேட வங்கி விடுமுறை நாள்† |
| அக்டோபர் | 18 | .. தீபாவளித் திருநாள்*† |
| நவம்பர் | 20 | .. ஈதுல பிதுர் (இரம்ழான் திருநாள்)*† |
| திசெம்பர் | 25 | .. நத்தார் திருநாள்*† |
| திசெம்பர் | 31 | .. விசேட வங்கி விடுமுறை நாள்† |

* அரசாங்க விடுமுறை நாட்கள்
† வங்கி விடுமுறை நாட்கள்

12–381

### சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டம்
### (அத்தியாயம் 219)

**ஆசுபத்திரிச் செயற்குழு, அரசாங்கப் பெரியாசுபத்திரி, காலி**

(219 ஆம் அத்தியாயமான) சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் நியதிகளின்படி 1970 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடையும் காலம்வரை திரு. ஆதர் சூரியாராச்சி அவர்களை, காலி அரசாங்கப் பெரியாசுபத்திரிக்கான ஆசுபத்திரிச் செயற்குழுவின் அங்கத்தவராக நியமிப்பதில் கௌரவ சௌக்கிய அமைச்சர் மகிழ்ச்சியடைகிறார்.

சீ. ஈ. எஸ். வீரதுங்க,
நிரந்தரச் செயலாளர்.

சௌக்கிய அமைச்சு,
கொழும்பு, 29 நவம்பர், 1970.

12-307

### சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டம்
### (அத்தியாயம்-219)

**ஆசுப்பத்திரிச் செயற்குழு, கொழும்பு வடக்கு அரசாங்கப் பெரியாசுபத்திரி**

(219 ஆம் அத்தியாயமான) சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் நியதிகளின்படி 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவடையும் காலம்வரை திரு. யு. டி. இயூசேபியஸ் அவர்களைக் கொழும்பு வடக்கு அரசாங்கப் பெரியாசுப்பத்திரிக்கான ஆசுப்பத்திரிச் செயற்குழுவின் அங்கத்தவராக நியமிப்பதில் கௌரவ சௌக்கிய அமைச்சர் மகிழ்ச்சியடைகிறார்.

சீ. ஈ. எஸ். வீரதுங்க,
நிரந்தரச் செயலாளர்.

சௌக்கிய அமைச்சு,
கொழும்பு, 29 நவம்பர், 1970.

12-386

### விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

(2 ம் அத்தியாயம் ஆகிய) பொருள் கோடற் கட்டளைச் சட்டத்தின் 12 ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் (173 ம் அத்தியாயம் ஆகிய) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 2 ம் பிரிவின் கீழ் வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சர்—

திரு. ஜே. சி. விஜயவர்த்தன என்பவர் (நானாவித பொருட்கள்) பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரியாக நியமனஞ் செய்யப்பட்டதை 1970 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 2 ஆந் திகதியிலிருந்து நீக்கஞ் செய்துள்ளார்.

ஜே. பி. கெலேகம,
நிரந்தரக் காரியதரிசி,
வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு நொவம்பர் 27.

12-329

## 1958 ம் ஆண்டின் 15 ம் இல. ஊழியர் சேமநிதி அதிகாரச் சட்டம்

### கட்டளைச் சட்டத்தின் 10 (3) ம் பிரிவிற்கமைந்த கட்டளை (13 ம் இல. கட்டளை)

1958 ம் ஆண்டின் 15 ம் இல. ஊழியர் சேமநிதி அதிகாரச் சட்டத்தின் 10 ம் பிரிவின் (3) ம் உட்பிரிவினுல் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, தொழில் அமைச்சர் மைக்கேல் போல் டி சொய்சா சிரிவர்த்தன ஆகிய நான், இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட திட்டத்திற் குட்பட்ட தொழில்கள் சம்பந்தமாக, 1970 ம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ம் நாளை, அவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக இக்கட்டளையின் மூலம் நியமிக்கின்றேன்.

எம். பீ. டி. இசட் சிரிவர்த்தன,
தொழில் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆடு நவம்பர் மீ 29 ந உ.

#### அட்டவணை

1. பின்வரும் விளைபொருள்கள், அவையாவன, தேயிலை, றப்பர், தெங்கு, கொக்கோ, ஏலம், மிளகு, கோப்பி, புகையிலை, நெல், சிறு தானியவகை, மரக்கறிவகை, பழவகை அல்லது வேறேதும் விவசாய விளைபொருள்கள் அதிற் பயிர்செய்யப்படுவதும் தனித்த ஒருவர் அல்லது ஒருவரினுமதிகமானோர் வேலைக்கமர்த்தப்படுவதுமான எந்த அளவு விஸ்தீரணமுடையதாயினுஞ்சரி ஏதேனுமொரு காணியிற் புரியப்படுந் தொழில்.

2. ஐந்து பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், பொதுத் துறைப் பொறி, பொறிமுறைப் பொறி, இயந்திரப் பொறி அல்லது மின்பொறித் தொழிலை முற்றாக அல்லது சிறிதளவுக்கு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

3. ஐந்து பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், தெங்குப் பொருள் உற்பத்தித் தொழிலை அதாவது காய்ந்த தேங்காய்த் துருவல் கொப்பரா, தேங்காயெண்ணெய் என்பவற்றையும் அல்லது தும்பையும் தேங்காய் நாரையும் உற்பத்தி செய்யும் தொழிலை முற்றாக அல்லது சிறிதளவுக்கு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

4. ஐந்து பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், தேங்காய் நார், மெத்தைத் தும்பு, சிலிர்த்த தேங்காய் நார்த்தும்பு ஆகியவற்றை ஏற்றுமதி செய்யும் தொழிலை அதாவது, தேங்காய் நார்த்தும்பை அல்லது சிலிர்த்த தும்பைப் பண்டகசாலையில் ஏற்றுக்கொள்ளுதல், ஏற்றுமதிக்காகத் தேங்காய் நார் மெத்தைத்தும்பை அல்லது தேங்காய் நார் சிலிர்த்த தும்பைப் பதப்படுத்துதல், கட்டாக்குதல், கப்பலில் ஏற்றும்பொருட்டு தேங்காய் நார் மெத்தைத்தும்பை அல்லது தேங்காய் நார் சிலிர்த்த தும்பை ஏற்றியனுப்புதல் என்னும் தொழிலை முற்றாக அல்லது சிறிதளவுக்கு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

5. ஐந்து பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், அச்சடிப்பவரொருவரின் தொழிலை முற்றாக அல்லது சிறிதளவுக்கு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

6. ஐந்து பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், வீதி வழியாக ஆட்களை அல்லது பண்டங்களைக் கட்டணத்திற்கோ கைம்மாறு கவோ எடுத்துச் செல்லும் தொழிலை முற்றாக அல்லது சிறிதளவுக்கு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

7. ஐந்து பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், கட்டடங்களைப் பராமரித்தல், பழுதுபார்த்தல், மாற்றியமைத்தல் ஆகியன உட்பட்ட கட்டட அமைப்புத் தொழிலை முற்றாக அல்லது சிறிதளவுக்கு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

8. ஐந்து பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், சாராயம் உற்பத்தி செய்யும் அல்லது விற்பனை செய்யும் அல்லது வினாகிரி உற்பத்தி செய்யும் அல்லது விற்பனை செய்யும், (தென்னை, பனை, கித்தில் போன்ற) மரங்களிலிருந்து கள்ளு இறக்கும் அல்லது அக்கள்ளை விற்பனை செய்யும் தொழிலை முற்றாக அல்லது சிறிதளவுக்கு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

9. ஐந்து பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், காரீயம் வெட்டியெடுக்கும் அல்லது காரீயத்தை ஏற்றுமதி செய்தற்காகப் பதப் படுத்தும் தொழிலை முற்றாக அல்லது சிறிதளவுக்கு நடத்தும் நோக்கத் திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

10. ஐந்து பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், புகையிலை அல்லது புகையிலைப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிலை முற்றிலும் அல்லது சிறிதளவுக்கு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

11. பீடி உற்பத்தி செய்யும் தொழிலை முற்றிலும் அல்லது சிறிதளவுக்கு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

இப்பந்தியில், " தொழில் " என்பது, முயற்சியின் சொந்தக்காரரிடம் அல்லது அவரது முகவரிடம் அல்லது வேறு ஆளிடம் மூலப்பொருளைப் பெற்று, தனது வீட்டில் அல்லது மற்றுமிடத்தில் பீடியை உற்பத்தி செய்து அதன் பின்னர் அதனைச் அச்சொந்தக்காரரிடம் அல்லது அவரது முகவரிடம் அல்லது அந்த வேறு ஆளிடம் ஒப்படைக்கும் ஒருவரின் தொழிலை உட்படுத்தும்.

12. ஐந்து பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், உரொட்டி சுடுபவரொருவரின் தொழிலை முற்றிலும் அல்லது சிறிதளவுக்கு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

13. ஐந்து பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், கறுவாப் பொருள்கள் உற்பத்தியை முற்றிலும் அல்லது சிறிதளவுக்கு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

14. ஐந்து பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், செங்கற்கள் அல்லது ஓடுகள் உற்பத்தி செய்யும் தொழிலை முற்றிலும் அல்லது சிறிதளவுக்கு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

15. தமது குடும்பத்தின் உறுப்பினர் மாத்திரம் வேலைபார்ப்பதாயிராது, ஒருவர் நடத்துவதும், மூன்று பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், முற்றிலும் அல்லது சிறிதளவுக்கு மொத்த அல்லது சில்லறை வியாபாரமெதனையும் நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

16. மூன்று பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், (107 ம் அத்தியாயமாகிய) கூட்டுறவுச் சங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பெற்றதுமான எக்கூட்டுறவுச் சங்கத்தின் சேவையிலும் புரியும் தொழில்.

17. தமது குடும்பத்தின் உறுப்பினர் மாத்திரம் வேலைபார்ப்பதாயிராது, ஒருவர் நடத்துவதும், மூன்று பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், முற்றிலும் அல்லது சிறிதளவுக்குப் பின்வரும் நடவடிக்கைகளுள் ஒன்றையேனும் அல்லது பலவற்றையேனும் அதாவது உடனுக்குடன் உட்கொள்ளுதற்கென உணவு அல்லது பானம் வழங்கு தலை அல்லது விருந்தினருக்கோ தங்குவோருக்கோ இடமளித்தலை நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

18. தமது குடும்பத்தின் உறுப்பினர் மாத்திரம் வேலைபார்ப்பதாயிராது, ஒருவர் நடத்துவதும், மூன்று பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், சிகையலங்காரரொருவரின், கைகால்பிடிப்பவரொருவரின் அல்லது வண்ணஞ்செய் கூடமொன்றினை நடத்தும் தொழிலை முற்றிலும் அல்லது சிறிதளவுக்கு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

19. தமது குடும்பத்தின் உறுப்பினர் மாத்திரம் வேலைபார்ப்பதாயிராது, ஒருவர் நடத்துவதும், மூன்று பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், வைத்திய, இரணசிகிச்சை, பற்சிகிச்சை, கண்சிகிச்சை அல்லது விலங்கு வைத்திய அல்லது ஏனைய சுகாதார சேவைகளை உதவும் தொழிலை முற்றிலும் அல்லது சிறிதளவுக்கு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

20. தமது குடும்பத்தின் உறுப்பினர் மாத்திரம் வேலைபார்ப்பதாயிராது, ஒருவர் நடத்துவதும், மூன்று பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், சாயமிடுபவரொருவரின், சலவைக்காரரொருவரின், அல்லது உலர்சலவைக்காரரொருவரின் தொழிலை முற்றிலும் அல்லது சிறிதளவுக்கு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

21. தமது குடும்பத்தின் உறுப்பினர் மாத்திரம் வேலைபார்ப்பதாயிராது, ஒருவர் நடத்துவதும், மூன்று பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், சட்டத்தொழில் நடத்துபவரொருவரின், ஆலோசனை கூறும் பொறிவலாளரொருவரின், கட்டடக்கலைஞரொருவரின், கணக்கெழுதுபவரொருவரின், விளம்பர முகவரொருவரின், ஏலவிற்பனைக்காரரொருவரின், பகுத்தாராய் இரசாயனரொருவரின் அல்லது கலைஞரொருவரின் தொழிலெதனையும் முற்றிலும் அல்லது சிறிதளவுக்கு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

22. தமது குடும்பத்தின் உறுப்பினர் மாத்திரம் வேலைபார்ப்பதாயிராது, ஒருவர் நடத்துவதும், மூன்று பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், பாற்பண்ணைக்காரரொருவரின் தொழிலை முற்றிலும் அல்லது சிறிதளவு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

23. தமது குடும்பத்தின் உறுப்பினர் மாத்திரம் வேலைபார்ப்பதாயிராது ஒருவர் நடத்துவதும், மூன்று பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும்—

(1) ஆயுட்கணக்கு நிபுணரொருவரின், அல்லது
(2) மதிப்பாளரொருவரின், அல்லது
(3) வரிமதிப்பாளரொருவரின், அல்லது
(4) தரகரொருவரின், அல்லது
(5) தரகுமுகவரொருவரின், அல்லது
(6) கடன் முகவரொருவரின், அல்லது
(7) படவரைவாளரொருவரின், அல்லது
(8) அனுப்பிவைக்கும், தேவை விண்ணப்பஞ் செய்யும் அல்லது ஏற்றகற்றும் முகவரொருவரின், அல்லது
(9) வீட்டு, தோட்ட முகவரொருவரின், அல்லது
(10) வீடு அலங்கரிப்பவரொருவரின், அல்லது
(11) வீட்டுத் தளவாடம் வழங்குபவரொருவரின், அல்லது
(12) உடைமைக் கொம்பனியொன்றின், அல்லது
(13) முதலீட்டுக் கொம்பனியொன்றின், அல்லது
(14) 1938 ம் ஆண்டு 51 ம் இல. கொம்பெனிக் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பெற்ற கொம்பெனியொன்றின், அல்லது
(15) ஈட்டுக் கொம்பெனியொன்றின், அல்லது
(16) செய்தி முகவரொருவரின், அல்லது
(17) நில அளவையாளரொருவரின், அல்லது
(18) பயண முகவரொருவரின், அல்லது
(19) காப்புறுதித் தொழில் நடத்துபவரொருவரின், அல்லது
(20) விலைமதிப்பாளரொருவரின்,

தொழிலை முற்றாக அல்லது சிறிதளவு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

24. தமது குடும்பத்தின் உறுப்பினர் மாத்திரம் வேலைபார்ப்பதாயிராது, ஒருவர் நடத்துவதும், மூன்று பேருக்குக் குறைவான ஆட்கள் வேலை பார்ப்பதுமான (1953 ம் ஆண்டின் 44 ம் இல. பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றிச் சம்பள அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகள் இயைபுடையதாகாததும் சிறிது நேர வேலை பார்க்கும் ஊழியர் என்ற முறையில் புரிவதுமான தொழில் நீங்கலாக) எக் கல்வித் தாபனத்தின் அல்லது போதனுதாபனத்தின் சேவையிலும் புரியும் தொழில்.

25. தமது குடும்பத்தின் உறுப்பினர் மாத்திரம் வேலைபார்ப்பதாயிராது, ஒருவர் நடத்துவதும், மூன்று பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், கடன் அறிக்கை செய்தல், பட்டியல்கள் சரிபார்த்துப் பணமறவிடல்—இணைப்படி ஆக்கல், திட்டவரைவுசெய்தல், ஒளிப்படப்படி தயாரித்தல், முகவரியிடல், தபாலிலனுப்புதல், சுருக்கெழுத்துச் சேவைகள் ஆகியவற்றின் தொழிலை முற்றிலும் அல்லது சிறிதளவுக்கு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

26. தமது குடும்பத்தின் உறுப்பினர் மாத்திரம் வேலைபார்ப்பதாயிராது, ஒருவர் நடத்துவதும், மூன்று பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், ஒளிப்படம் பிடிப்பவரொருவரின் தொழிலை முற்றிலும் அல்லது சிறிதளவுக்கு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

27. மூன்று பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், யாதாயினும் வியாபாரத்தில், தொழிலில் அல்லது கைத்தொழிலில் ஈடுபடும் உறுப்பினரின் நலவுரிமைகளை விருத்திசெய்யும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எச்சங்கத்தின் சேவையிலும் புரியும் தொழில்.

28. மூன்று பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்க்கும் எக் கழகத்தின் சேவையிலும் புரியும் தொழில்.

29. தமது குடும்பத்தின் உறுப்பினர் மாத்திரம் வேலைபார்ப்பதாயிராது, ஒருவர் நடத்துவதும், ஐந்து பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், மரம் தறித்து வீழ்த்தும், வெட்டும் அல்லது வெட்டு மரத்தை ஏற்றியனுப்பும் அல்லது அரியும் தொழிலை முற்றிலும் அல்லது சிறிதளவுக்கு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

30. தமது குடும்பத்தின் உறுப்பினர் மாத்திரம் வேலைபார்ப்பதாயிராது, ஒருவர் நடத்துவதும், ஐந்து பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், கல் அகழும் தொழிலை முற்றிலும் அல்லது சிறிதளவுக்கு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

31. தமது குடும்பத்தின் உறுப்பினர் மாத்திரம் வேலைபார்ப்பதாயிராது, ஒருவர் நடத்துவதும், ஐந்து பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், பொருள்கள் உற்பத்திசெய்யப்படுவதும், மாற்றியமைக்கப்படுவதும், துப்பரவு செய்யப்படுவதும், பழுதுபார்க்கப்படுவதும், அலங்கரிக்கப்படுவதும், மெருகிடப்படுவதும், விற்பனைக்காகச் சரிப்படுத்தப்படுவதும், தகர்த்தப்படுவதும் அல்லது அழிக்கப்படுவதும் அல்லது பொருள்கள் உருமாற்றப்படுவதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

32. தமது குடும்பத்தின் உறுப்பினர் மாத்திரம் வேலைபார்ப்பதாயிராது, ஒருவர் நடத்துவதும், ஐந்து பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், முற்றிலும் அல்லது சிறிதளவுக்கு இறைச்சிக்காக விலங்கினத்தை அடிக்கும், அவ்விறைச்சியைப் பேணும், தயாரிக்கும், ஏற்றியனுப்பும், நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

33. ஐந்து பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், இலங்கையின் கடற்றுறையெதிலும் பின்வரும் செயல்களிலெவற்றையேனும் முற்றிலும் அல்லது சிறிதளவுக்கு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில், அதாவது—

(1) எக்கப்பலிலும் அல்லது மரக்கலத்திலும் பண்டங்களை, கால்நடைகளை, எண்ணெயை அல்லது நிலக்கரியை ஏற்றுதல் அல்லது எக்கப்பலிலிருந்தும் அல்லது மரக்கலத்திலிருந்தும் பண்டங்களை, கால்நடைகளை, எண்ணெயை அல்லது நிலக்கரியை இறக்குதல்,
(2) எக்கப்பலுக்காயினும் கப்பலிலிருந்தாயினும் மரக்கலத்திற்காயினும் மரக்கலத்திலிருந்தாயினும் பண்டங்களை, கால்நடைகளை எண்ணெயை அல்லது நிலக்கரியை ஏற்றிச்செல்லல்,
(3) பண்டங்களையும் கப்பற்றுறை உபகரணங்களையும் சுமந்துசெல்லல்,
(4) பண்டங்களை, கால்நடைகளை, எண்ணெயை அல்லது நிலக்கரியைக் கரையிலிறக்குதல், பாரஞ்சாம்பியினால் இறக்குதல், சுமந்து செல்லல், குவித்தல், களஞ்சியத்திடுதல், ஒப்படைத்தல், ஏற்றிப் பறித்தல், அகற்றல்,
(5) பிரயாணிகளையும் கப்பற்றுறையில் தொழில்செய்யும் மற்றும் ஆட்களையும் நீர்மார்க்கமாக ஏற்றிச்செல்லல்,
(6) இழுத்துச்செல்லல்,
(7) எரிபொருளை, நீரை, கப்பல் இருப்புப் பொருள்களை, எந்திரத் தொழில் இருப்புப் பொருள்களை அல்லது தேவையான மற்றும் பொருள்களை மரக்கலங்களுக்கு வழங்கல்,
(8) கப்பலில் அல்லது மரக்கலத்தில் தொழில்புரியும் மேற்பார்வை ஊழியரையும் தொழிலாளரையும் நீர்மார்க்கமாக ஏற்றிச் செல்லல்,
(9) கப்பல்களின் அல்லது மரக்கலங்களின் பாதுகாப்புக்கு அல்லது வசதிக்கு உகந்த அல்லது பண்டங்களைக் கப்பல்களில் ஏற்றுதற்கு அல்லது இறக்குதற்கு வசதிசெய்யும் எவ்வேலையையும் காரியத்தையும் செய்தல்.

34. தமது குடும்பத்தின் உறுப்பினர் மாத்திரம் வேலைபார்ப்பதாயிராது, ஒருவர் நடத்துவதும், ஐந்து பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், பண்டங்களை அல்லது பிரயாணிகளைக் கடல்மார்க்கமாக அல்லது உள்நாட்டு நீர்மார்க்கமாக ஏற்றிச்செல்லும் தொழிலை முற்றிலும் அல்லது சிறிதளவுக்கு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

35. தமது குடும்பத்தின் உறுப்பினர் மாத்திரம் வேலைபார்ப்பதாயிராது, ஒருவர் நடத்துவதும், ஐந்து பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், களஞ்சிய அல்லது பண்டகசாலை அல்லது ஏற்றும் அல்லது இறக்கும் வசதிகளைக் கட்டணத்திற்காக அல்லது கைம்மாறாக அளிக்கும் தொழிலை முற்றிலும் அல்லது சிறிதளவுக்கு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

36. தமது குடும்பத்தின் உறுப்பினர் மாத்திரம் வேலை பார்ப்பதாயிராது, ஒருவர் நடத்துவதும், ஐந்து பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், கடலக இயந்திரத் தொழிலை முற்றிலும் அல்லது சிறிதளவுக்கு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

37. தமது குடும்பத்தின் உறுப்பினர் மாத்திரம் வேலைபார்ப்பதாயிராது, ஒருவர் நடத்துவதும், ஐந்து பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதும், சவம் அடக்கஞ்செய்பவரின் அல்லது இழவு ஏற்பாடு

செய்பவரின் தொழிலை முற்றிலும் அல்லது சிறிதளவுக்கு நடத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்.

**38.** தமது குடும்பத்தின் உறுப்பினர் மாத்திரம் வேலைபார்ப்பதாயிராது, ஒருவர் நடத்துவதும், பின்வருவனவல்லாத திட்டத்திற்குட்பட்ட எத்தொழிலிலும் ஐந்து பேருக்குக் குறைவான ஆட்கள் வேலைபார்ப்பதுமான எம்முயற்சியின் சேவையிலும் புரியும் தொழில்—

(1) இவ்வட்டவணையில் 1 முதல் 37 வரையுள்ள பந்திகளில் உட்படுத்தப்பட்டவை.

(2) இக்கட்டளைச் சட்டத்தின் 10 (3) ம் பிரிவின் கீழ் இதனகத்தே முன்னர் பிறப்பிக்கப்பட்ட எக்கட்டளையிலும் உட்படுத்தப்பட்டவை.

(3) வீட்டுச் சேவைக்குட்பட்டவை.

(4) ஏதாவதொரு தருமத் தாபனமொன்றிற்கு அல்லது தெய்வ வழிபாட்டு அல்லது சமூகசேவை நோக்கத்திற்காகவே நிருவகிக்கப்படும் தாபனமொன்றிற்குட்பட்டவை.

(5) பாலியக் குற்றவாளிகளுக்கு, அநாதையருக்கு அல்லது தஞ்சமில்லா, ஊமையான, செவிடான அல்லது குருடான ஆட்களுக்கு முக்கியமாகக் கைத்தொழிற் பயிற்சியளிக்கும் நோக்கத்திற்காக நடத்தப்படும் எம்முயற்சிக்குமுட்பட்டவை.

இந்த அட்டவணையில், " கட்டளைச் சட்டம் " என்பது 1958 ம் ஆண்டின் 15 ம் இல. ஊழியர் சேமநிதி அதிகாரச் சட்டம் எனப் பொருள்படும்.

இந்த அட்டவணையில், " குடும்பம் " என்பது, ஏதேனுமொரு முயற்சி தொடர்பாக, முயற்சிநடத்துபவர், அவரது தாரம், அந்த முயற்சி நடத்துபவரின் பிள்ளைகள், அத்தாரத்தின் பிள்ளைகளெவர்களும் எனப் பொருள்படும்.

12–282

---

## இணக்கச் சபைகள் சட்டம்

### கட்டளை

*1959 இன் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள, 1946 இன் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47 (2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு, 1970 யூன் 16 ஆம் தேதிய 14,910/8 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு, நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர் இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான் இதன் மூலம்—*

*(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் 1970 மே 8 ஆம் தேதிய 14,905 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 31 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட மல்வத்தைக் கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன்.*

*1. மல்வத்தை, புது மல்வத்தையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை செல்லையா அவர்கள்.*

*2. சம்மாந்துறை, சொறிக்கல்முனையைச் சேர்ந்த ஜுவான் பிள்ளை இக்நேசியஸ் அவர்கள்.*

*3. சம்மாந்துறை, சொறிக்கல்முனையைச் சேர்ந்த சவாரி அந்தோனிமுத்து அவர்கள்.*

*4. சம்மாந்துறை, சொறிக்கல்முனையைச் சேர்ந்த றபாயல் அந்தோனிப்பிள்ளை அவர்கள்.*

*5. சம்மாந்துறை, சொறிக்கல்முனையைச் சேர்ந்த நிகிலான் அந்தோனி அவர்கள்.*

*6. சம்மாந்துறை, சொறிக்கல்முனையைச் சேர்ந்த பிலிப் ஜோசப் அவர்கள்.*

*7. சம்மாந்துறை, சொறிக்கல்முனையைச் சேர்ந்த பிரான்சிஸ் அந்தோனி அவர்கள்.*

*8. சம்மாந்துறை, சொறிக்கல்முனையைச் சேர்ந்த குருசு அபுலின் அவர்கள்.*

*9. சம்மாந்துறை, சொறிக்கல்முனையைச் சேர்ந்த அருளப்பு ஜூலியன் பயஸ் அவர்கள்.*

*10. சம்மாந்துறை, சொறிக்கல்முனையைச் சேர்ந்த கே. பேதுரு பெரேரா அவர்கள்.*

*11. சம்மாந்துறை, சொறிக்கல்முனையைச் சேர்ந்த அப்துல் கமீது முகமது மக்கின் அவர்கள்.*

*12. சம்மாந்துறை, வீரச்சோலையைச் சேர்ந்த பஸ்தியன்பிள்ளை பீற்றர் செல்வம் அவர்கள்.*

*13. சம்மாந்துறை, வீரச்சோலையைச் சேர்ந்த ஜுவான்பிள்ளை சுவானி அவர்கள்.*

*14. சம்மாந்துறை, வீரச்சோலையைச் சேர்ந்த சிவனடியான் சின்னத்துரை அவர்கள்.*

*15. சம்மாந்துறை, வீரச்சோலையைச் சேர்ந்த நாகூரான் அகமது லெப்பே அவர்கள்.*

*16. மல்வத்தையைச் சேர்ந்த சின்னத்துரை செல்லத்துரை அவர்கள்.*

*17. மல்வத்தை, வீரமல்வத்தையைச் சேர்ந்த கந்தப்பன் சிவனடியான் அவர்கள்.*

*18. மல்வத்தை, தபாற்கந்தோரைச் சேர்ந்த வேலுப்பிள்ளை நல்லதம்பி அவர்கள்.*

*19. மல்வத்தை, கணபதிபுரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கதிர்காமத்தம்பி அவர்கள்.*

*20. மல்வத்தை, கணபதிபுரத்தைச் சேர்ந்த தம்பிமுத்து கந்தையா அவர்கள்.*

*21. மல்வத்தை, மஜீத்புரத்தைச் சேர்ந்த முகமது இஸ்மெயில் முகமது இப்ராகிம் அவர்கள்.*

*22. மல்வத்தை, மஜீத்புரத்தைச் சேர்ந்த முகமதுதம்பி மீரா லெப்பே அவர்கள்.*

*23. மல்வத்தை, மல்லிகைத்தீவைச் சேர்ந்த தம்பிநாதபிள்ளை நாகராசா அவர்கள்.*

*24. மல்வத்தை, வலதாபிட்டியைச் சேர்ந்த வெள்ளையர் சுப்பையா அவர்கள்.*

*25. மல்வத்தை, மல்லிகைத்தீவைச் சேர்ந்த சாமித்தம்பி சின்னத்தம்பி அவர்கள்.*

*26. மல்வத்தையைச் சேர்ந்த ஜெயசிங்க முதியன்சேலாகே புஞ்சிபண்டா அவர்கள்.*

*27. மல்வத்தை, மஜீத்புரத்தைச் சேர்ந்த மொகிதீன் பாவ்ஸா மீரா லெப்பே அவர்கள்.*

*(ஆ) மல்வத்தை, புதுமல்வத்தையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை செல்லையா அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராக விருக்க நியமிக்கின்றேன்.*

*(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டுமெனவும் நிச்சயிக்கின்றேன்.*

ஆர். விக்கிரமநாயக்க,
*நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர்.*

*நீதி அமைச்சு,*
*கொழும்பு, 1970 நவம்பர் 22.*

*12-297*

---

## இணக்கச் சபைகள் சட்டம்

*1959 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள, 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47 (2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு, 1970 யூன் 16 ஆம் தேதிய 14,910/8 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர் இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான் இதற்குள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ள இடப்பரப்புக்குள், சொல்லப்பட்ட சட்டம் நடைமுறையிலிருத்தல் வேண்டுமென இதனால் தீர்மானிக்கின்றேன்.*

ஆர். விக்கிரமநாயக்க,
*நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர்.*

*நீதி அமைச்சு,*
*கொழும்பு, 1970 நவம்பர் 29.*

### அட்டவணை

1. இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பெல்மதுளை பட்டினசபைப் பகுதி.

2. குருநாகலை மாவட்டத்திலுள்ள அலவைப் பட்டினசபைப் பகுதி.

3. குருநாகலை மாவட்டத்திலுள்ள நாரம்மலைப் பட்டினசபைப் பகுதி.

4. கொழும்பு மாவட்டத்திலுள்ள கட்டுநாயக்க-சீதுவை நகர சபைப் பகுதி.

*12-319*

## சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம்

### அறிவித்தல்

*(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் படி, கறுவாத் தொழிற் சம்பளச் சபையில் வேலைக் கமர்த்துபவர்களின் பிரதிநிதியாயிருந்த காலஞ்சென்ற திரு. ஜே. ஈ. பி. இராஜபக்ச என்பவருக்குப் பதிலாக அங்கம் வகிக்க திரு. கே. எச். டபிள்யூ. ஓ. டீ சில்வா—சமாதான நீதவான்—என்பவரை, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென, 1943 ம் ஆண்டுச் சம்பளச் சபை ஒழுங்கு விதிகளின் 26 ம் ஒழுங்கு விதியின்படி இத்தால் அறிவிக்கப்படுகிறது.*

ஏ. ஈ. கோகர்ளி மொறகொடை,
நிரந்தரச் செயலாளர்.

தொழில் அமைச்சு.
கொழும்பு,
1970 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ந் தேதி.

12-326

---

## இணக்கச் சபைகள் சட்டம்

### 3 (2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1959 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்டவாறுள்ள 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47 (2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு, 1970 யூன் 16 ஆந் தேதிய 14,910/8 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1965 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்திஞல் திருத்தப்பட்டவாறுள்ள 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (2) உட்பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி, நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர், இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், இதற்குள்ள அட்டவணையிற் குறிப்பிட்டுள்ள இடப்பரப்பு ஒவ்வொன்றுக்கும் இணக்குவோர் குழாம் ஒவ்வொன்றினை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும், அத்தகைய இடப்பரப்பு ஒவ்வொன்றினதும் இணக்குவோர் குழாத்துக்கு நியமிக்கப்படவேண்டிய ஆட்களைப் பற்றி 1971, ஜனவரி 15 ஆந் நாள் அல்லது அதற்கு முன்னர் அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழான விதப்புரைகள், பெரும்பாக அரசிறை அலுவலரின் அலுவலகத்திற் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவத்தில் எழுத்தில் எனக்குச் செய்யப்படலாமெனவும் இந்தால் அறிவிக்கின்றேன்.

இரத்தினசிறி விக்கிரமநாயக்க,
நீதியமைச்சரின் பாராளுமன்றச்
செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1970 ம் ஆண்டு நவெம்பர் மீ 29 ந் ௳.

#### அட்டவணை

(1) இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பெல்மதுளைப் பட்டினசபைப் பகுதி
(2) இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள அட்களன் கோரளை மெதப்பற்றுக் கிராமப் பகுதி.
(3) இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள தெகிகம்பல் கோரளை எகொட பொத பற்றுக் கிராமப் பகுதி.
(4) அனுராதபுர மாவட்டத்திலுள்ள பதவியாக் கிராமப் பகுதி.
(5) அனுராதபுர மாவட்டத்திலுள்ள குஞ்சுட்டு கோரளைக் கிராமப் பகுதி.
(6) அனுராதபுர மாவட்டத்திலுள்ள வடக்கு கடவத்தை கோரளைக் கிராமப் பகுதி.
(7) அனுராதபுர மாவட்டத்திலுள்ள மேற்கு கடவத்தைக் கோரளைக் கிராமப் பகுதி.
(8) அனுராதபுர மாவட்டத்திலுள்ள கிழக்குக் கடவத்தைக் கோரளைக் கிராமப் பகுதி.
(9) அனுராதபுர மாவட்டத்திலுள்ள கிழக்கு கெந்தே கோரளைக் கிராமப் பகுதி.
(10) அனுராதபுர மாவட்டத்திலுள்ள மேற்குக் கெந்தே கோரளைக் கிராமப் பகுதி.
(11) அனுராதபுர மாவட்டத்திலுள்ள வடக்கு நுவரகம் கோரளைக் கிராமப் பகுதி.
(12) குருநாகலை மாவட்டத்திலுள்ள நாரம்மலைப் பட்டினசபைப் பகுதி.
(13) குருநாகலை மாவட்டத்திலுள்ள அலவைப் பட்டினசபைப் பகுதி.
(14) கேகாலை மாவட்டத்திலுள்ள மாவதபற்றுக் கிராமப் பகுதி
(15) கொழும்பு மாவட்டத்திலுள்ள ஆண்டியம்பலமைக் கிராமப் பகுதி.
(16) கொழும்பு மாவட்டத்திலுள்ள கட்டுநாயக்க-சீதுவை நகர சபைப் பகுதி.

12-317

---

## 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டம்

### 25 (1) ஆம் பிரிவின் கீழ் கட்டளை

1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டம் 25 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் எனக்களிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு, போக்குவரத்து அமைச்சர் லெஸ்லி சைமன் குணவர்த்தன ஆகிய நான், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் அலுவல் ளின் நோக்கத்திற்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள அசைவற்ற ஆதனத்தின் உத்தேச வாங்குதலை இக்கட்டளை மூலம் அனுமதிக்கிறேன்.

லெஸ்லி குணவர்த்தன,
போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
1970 ந் ஆண்டு நவம்பர் மீ 29 ந் ௳.

#### அட்டவணை

தென் மாகாணம், காலி மாவட்டம், தல்பே பற்று டி. ஆர். ஓ. பகுதி, கோதாகொடை கிராமச் சபை எல்லைக்குட்பட்ட இமதுவ கிராம சேவகர் பிரிவிலுள்ள இமதுவ கிராமத்தில் அமைந்துள்ள கிட்டத்தட்ட 0ஏ. 3று. 0பேர். விஸ்தீரணமுள்ள ஓர் காணித்துண்டு.

**எல்லைகள் :**

வடக்கு : இமதுவையைச் சேர்ந்த எஸ். கொடிகார உரிமைகோரும் சொத்தும் காலி–தெனியாயா பீ. டபிள்யூ. டி. வீதியும்.

கிழக்கு : இமதுவ, பத்தேமுல்லையைச் சேர்ந்த கே. ஜி. தியோனிஸ் அப்புகாமி உரிமைகோரும் சொத்து.

தெற்கு : இமதுவ, பத்தேமுல்லையைச் சேர்ந்த ரீ. ஏ. ஜினதாசாவும் மறுபேரும் உரிமைகோரும் சொத்தும் அரிசியாலையும்.

மேற்கு : இமதுவ–அகங்கமை பி. டபிள்யு. டி. வீதி.

2. வாங்கவேண்டிய காணித்துண்டின் விவரங்கள் பின்வருமாறு :—,

காணிப் பெயர் : கொஸ்ககாகும்புறவத்தை, வரிமதிப்பு இல. 28 அகங்கமை வீதி.

விவரணம் : கட்டிடமொன்றுக்கு கல் அத்திவாரத்துடன்கூடிய தென்னங்காணி.

விஸ்தீரணம் : கிட்டத்தட்ட 0ஏ. 3று. 0பேர்ச்.

உரிமைகோருபவரின் பெயரும் விலாசமும் : கே. வி. கரோலிஸ் அப்புகாமியும் மறுபேரும், பத்தேமுல்லை, இமதுவ.

12–408

---

## சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம்

### அறிவித்தல்

1970 ம் ஆண்டு ஒக்ரோபர் 23 ந் தேதி தொடக்கம் மூன்று ஆண்டு காலத்திற்கு இறப்பர் வளர்த்தலும் பதப்படுத்தலும் தொடர்பாய தொழிற் சம்பளச் சபையில் உறுப்பினராயிருத்தற்கு, (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 9 ம் பிரிவிற்கமைய பின்வரும் பேர்வழிகளை மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென, 1943 ம் ஆண்டுச் சம்பளச் சபை ஒழுங்கு விதிகளின் 26 ம் ஒழுங்கு விதியின்படி இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஏ. ஈ. கோகர்ளி மொறகொட,
நிரந்தரச் செயலாளர்,
தொழில் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ந் தேதி.

#### நியமன உறுப்பினர்

1. திரு. எஸ். டி. எஸ். ஜயவர்தன—ச. நீ.
2. திரு. ரெஜி ரணதுங்க
3. திரு. எச். எம். கிரிபண்டா

**வேலைக்கமர்த்துபவர்களின் பிரதிநிதிகள்**

1. திரு. டி. பீ. எல்லபொல
2. திரு. உபாலி டயஸ்
3. திரு. டி. ஜே. பெரேரா
4. திரு. ஸ்டான்லி வில்லியம்
5. திரு. எச். ராஜகருண
6. திரு. ரி. ஆர். ஆர். விஜேவிக்ரம
7. திரு. சி. ராஜசூரிய
8. திரு. எவ். டி. சி. விஜேசிங்க
9. திரு. ஜீ. பி. பரணகம
10. திரு. டி. எஸ். ஆர். குணவர்தன
11. திரு. டப்ள்யூ. றி. பி. குணதிலக
12. திரு. எச். ஜி. ஆர். டி மெல்
13. திரு. ஈ. அபேசுந்தர
14. திரு. கே. என். சமரசிங்க
15. திரு. றி. டி. எ. டி சில்வா
16. திரு. ஆர். எம். ரத்நாயக்க
17. திரு. எம். எஸ். பர்ணந்தோ
18. திரு. டி. றி. வராகொட

**தொழிலாளரின் பிரதிநிதிகள்**

1. திரு. கே. ஜி. சுகததாச
2. திரு. எஸ். சிவசாமி
3. திரு. ஈ. ஏ. ஹேரத் பண்டார
4. திரு. ஜே. ரத்நாயக்க
5. திரு. வி. அண்ணாமலை
6. திரு. ஏ. எம். டி. ராஜன்
7. திரு. ஏ. உலொட்விக்
8. திரு. பி. குமாரசாமி
9. திரு. வி. முனியாண்டி
10. திரு. ஈ. ஏ. ஜே. அமரசேகர
11. திரு. ஏ. டி. சரத்சந்திர
12. திரு. எஸ். செல்லையா
13. திரு. உவால்ற்றர் ஜோதிபால
14. திரு. எஸ். மகேந்திரன்
15. திரு. ஹிக்கொட தர்மசேன
16. திரு. ஏ. அசீஸ்—பா.உ.
17. திரு. வி. பி. சதாசிவம்
18. திரு. வி. இராஜகோபால்

12–281

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## சர்வதேசக் கல்வி ஆண்டு 1970 ஐக் குறிக்குமுகமாக விசேட வெளியீடு செய்யப்படவிருக்கும் முத்திரைகள்

சர்வதேசக் கல்வி ஆண்டு 1970 ஐக் குறிக்குமுகமாக 1970 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ந் திகதியன்று 15 சத மதிப்புள்ள முத்திரையின் விசேட வெளியீடு நடைபெறும் என்பதை இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தருகிறோம். இம்முத்திரைகள் 1971 ம் ஆண்டு யூன் மாதம் 30 ந் திகதி வரைக்கும் அல்லது இருப்பு முடியும் வரைக்கும், எது முதலில் நிகழ்கின்றது என்பதைப் பொறுத்து விற்பனைக்குக்கிடைக்கும். இம் முத்திரைகள் விற்பனைக்கிருக்கும் மேற் குறிப்பிட்ட காலவெல்லையில் தற்பொழுது பாவனையிலிருக்கும் 15 சத மதிப்புள்ள முத்திரைத் தொடர்களின் விற்பனை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கும்.

2. இந்த 15 சத மதிப்புள்ள முத்திரையில் உள்ள ஓலைச் சுவடியின் படமானது, பௌத்த பொற்காலத்தின் போது 455 லிருந்து 467 ம் வரையான ஆண்டுகளில் நிகழ்ந்த மகத்தானதொரு கல்வி நிகழ்ச்சியான, திரிபிடகம் (புத்த பிரானின் போதனைகளைத் தாங்கிய பாளி மொழிப் புத்தகங்களின் தொகுப்பு) எழுதப்படுமாறு பணிக்கப்பட்டதைக் குறிப்பதாக விளங்குகிறது. ஞான ஒளி பொருந்திய ஒரு மனித உருவத் தலையை குறிப்பதாக விரிவடைந்து கொண்டு போகும் வட்டங்கள் விளங்குகின்றன.

எஸ். சிற்றம்பலம்,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
கொழும்பு 1,
1970 ம் ஆம் டிசம்பர் மீ 3 ந் உ.

12–418

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக் கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

### அட்டவணை—1970

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| திசெம்பர் | .. | 4.12.70 | வெள்ளி | .. | 27.11.70 | வெள்ளி | .. | ந.ப. | 12.00 |
| | | 11.12.70 | வெள்ளி | .. | 4.12.70 | வெள்ளி | .. | ந.ப. | 12.00 |
| | | 18.12.70 | வெள்ளி | .. | 10.12.70 | வியாழன் | .. | பி.ப. | 3.30 |
| | | 24.12.70 | வியாழன் | .. | 17.12.70 | வியாழன் | .. | பி.ப. | 3.30 |
| | | 31.12.70 | வியாழன் | .. | 24.12.70 | வியாழன் | .. | பி.ப. | 3.30 |

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு யூன் மீ 2 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.